செ.வெ.எண்: 54 நாள்: 23.10.2020

# தூத்துக்குடி மாவட்டம், ஏரல் வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் வட்டாட்சியர் குடியிருப்பு ரூ.4.12 கோடி மதிப்பில் புதிய கட்டிடம் கட்டுமான பணிகளை மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர்.செ.ராஜூ அவர்கள் துவக்கி வைத்தார்

---

தூத்துக்குடி மாவட்டம், ஏரல் வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் வட்டாட்சியர் குடியிருப்பு ரூ.4.12 கோடி மதிப்பில் புதிய கட்டிடம் கட்டுமான பணிகளுக்கான பூமி பூஜை மற்றும் கட்டுமான பணிகள் துவக்க நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், இன்று (23.10.2020) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர்.செ.ராஜூ அவர்கள், கலந்து கொண்டு, ஏரல் வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் வட்டாட்சியர் குடியிருப்பு ரூ.4.12 கோடி மதிப்பில் புதிய கட்டிடம் கட்டுமான பணிகளை துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் ஸ்ரீவைகுண்டம் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.பி.சண்முகநாதன் அவர்கள் முன்னிலை வகித்தார்.

நிகழ்ச்சியில் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் செ.ராஜூ அவர்கள் பேசியதாவது:

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 1986ஆம் ஆண்டு ஒன்றாக இருந்த நெல்லை மாவட்டம் நிர்வாக ரிதியாக பிரித்து தூத்துக்குடியை தலைமை இடமாக கொண்டு புதிய தூத்துக்குடி மாவட்டம் உருவாக்கினார்கள். புதிய தூத்துக்குடி மாவட்டத்தில் பிரிக்கப்படும்போது 7 வட்டாட்சியர் அலுவலகங்கள் செயல்பட்டு வந்தது. தூத்துக்குடி மாவட்டத்தில் 8 வது வட்டமாக எட்டயபுரத்தை தலைமையிடமாக கொண்டு புதிய வட்டமும், 9வது வட்டமாக கயத்தாரை தலைமையிடமாக கொண்டு புதிய வட்டமும் ஏற்படுத்தப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 22.11.2017 அன்று தூத்துக்குடியில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவிலே ஏரலை தலைமையிடமாக கொண்டு புதிய வட்டம் உருவாக்கப்படும் என்று அறிவிப்பு அறிவித்தார்கள். அதனடிப்படையில் 10 வது வட்டமாக ஏரலை தலைமையிடமாக கொண்டு புதிய வட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த 3 வட்டங்களையும் உருவாக்கியது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழக ஆட்சிதான்.

நிர்வாக ரிதியாக மக்கள் பயன்பெறுவதற்கு நிர்வாக வசதியை ஏற்படுத்தி தந்த அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு. அந்த வகையிலே அதனைத்தொடர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திருச்செந்தூரில் நடைபெற்ற டாக்டர் சிவந்தி ஆதித்தனால் மணிமண்டபம் திறப்பு விழாவில் ஏரல் வட்டாட்சியர்

அலுவலகத்திற்கு புதிய கட்டிடம் மற்றும் வட்டாட்சியர் குடியிருப்ப வளாகமும் கட்ட அடிக்கல் நாட்டினார்கள். அதனைத்தொடர்ந்து இன்றைக்கு புதிய வட்டாட்சியர் அலுவலகமும், அலுவலர் குடியிருப்ப வளாகமும் சேர்ந்து ரூ.4.12 கோடி மதிப்பில் புதிய கட்டிடம் கட்ட பூமி பூஜை சிறப்பாக நடைபெற்றது. இந்த புதிய கட்டிடம் தரைத்தளம் 6350 சதுர அடி பரப்பிலும், முதல் தளம் 6350 சதுர அடி பரப்பிலும் என மொத்தம் 12700 சதுர அடி பரப்பில் வட்டாட்சியர் அலுவலகம், பதிவறை, கணிணி அறை, வட்ட வழங்கல் அலுவலர் அலுவலகம், எழுதுபொருள் அறை, ஆண், பெண், மாற்றுத்திறனாளிகளுக்கான கழிப்பறை மற்றும் ரேம்ப் வசதியுடன் இந்த புதிய கட்டிடம் மிக எழிலோடும், நவீன வசதிகளோடு புதிய வட்டாட்சியர் அலுவலகம் உருவாக்கப்பட இருக்கிறது. வட்டாட்சியர் குடியிருப்பு கட்டிடம் 966 சதுர அடி பரப்பில் அனைத்து வசதிகளுடன் கட்டப்பட உள்ளது என்பதை மகிழ்வோடு தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இப்பகுதி வட்ட அந்தஸ்து பெற்றுள்ளதால் மேலும் பல்வேறு அலுவலகங்களும் இங்கு திறக்கப்படும். இதன் மூலம் இப்பகுதி மக்கள் மிகுந்த பயன்பெறுவார்கள் என தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் திருச்செந்தூர் கோட்டாட்சியர் செல்வி.தனப்ரியா, ஏரல் வட்டாட்சியர் திரு.இசக்கிராஜ், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் திரு.ஜெயராமன், உதவி செயற்பொறியாளர் திரு.வெள்ளைசாமி, உதவி பொறியாளர் திரு.அருண்குமார், மாவட்ட ஊராட்சி துணைத்தலைவர் வழக்கறிஞர் திரு.செல்வகுமார், மாவட்ட பனைவெல்ல சங்க தலைவர் திரு.தாமோதரன், ஒன்றியக்குழு தலைவர் திருமதி.வசந்தா, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் திரு.அழகேசன், முக்கிய பிரமுகர் திரு.ஆறுமுகநயினார், திரு.திருப்பாற்கடல், திரு.காசிராஜன், திரு.ராஜநாராயணன், திரு.விஜயகுமார், திரு.ராமச்சந்திரன் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.